சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–25.08.2022.

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஆவணி மாதம் 13–ஆம் நாள் (ஆகஸ்ட் திங்கள் 29–ஆம் நாள்:–29.08.2022) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் ஜுலை/2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்**
**நகர்மன்ற தீர்மான எண்:** **157** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி, பொறியாளர் அவர்களின் ஜுலை/2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்**
**நகர்மன்ற தீர்மான எண்:** **158** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஒரு பகுதியாக வீடு வீடாக குப்பை பிரித்து வாங்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உருவாகக்கூடிய சாக்கடை மண் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு சிறிய அளவிலான டிராக்டர் வாகனம் தேவைப்படுகிறது. ஏற்கனவே, கொரோனா தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 60 G 0742 Grape Master டிராக்டர் வாகனத்திற்கு புதிதாக டிரைலர் (1 எண்ணம்) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,25,000/–ற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்**
**நகர்மன்ற தீர்மான எண்:** **159** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பீளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் கையிருப்பு குறைந்த அளவே உள்ளதாலும்,

டெங்கு தடுப்பு பணிகள், கொரோனா தடுப்பு பணிகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் ஆகஸ்ட் 2022 முதல் மார்ச் 2023 முடிய 8 மாதங்களுக்கு தேவைப்படும் காலங்களில் அவ்வப்போது கொள்முதல் செய்ய வேண்டி நீர்த்த சுண்ணாம்புத்தூள்– 50MT, பீளிச்சிங் பவுடர் – 20MT வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,00,000 /– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்**
**நகர்மன்ற தீர்மான எண்:** **160** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு, திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் 500 (50Lit) வாங்க 17.08.2022 கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்கள் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **தொகை (1 எண்ணம்)** |
|---|---|---|
| 1. | ISAIYA ASSOCIATES, OLD BATALAGUNDU என்ற நிறுவனம் | 846 |
| 2. | RATHINA AGENCY, COIMBATORE என்ற நிறுவனம் | 855 |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ISAIYA ASSOCIATES, OLD BATALAGUNDU என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.7746/2022/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்:** **161** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.6**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.வ.போஸ், உதவியாளர்(ஓய்வு) அவர்கள் பணிமூப்பு பட்டியலில் 2001 ஆம் ஆண்டு முதல் பெயரினை சேர்க்கக்கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.47026/2011/K2, நாள்.08.07.2013–க்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண்.W.P(MD)No.15715/2014) மேற்படி வழக்கிற்கு தீர்ப்பானது 09.03.2022 ஆம்

நாள் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பின் மீது சட்டக்கருத்துரு பெற்று வழக்கின் இரண்டாம் பிரதிவாதியான சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. எனவே, வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/—க்கு மற்றும் தொடர்பு செலவினங்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1 **மன்றம் அனுமதிக்கலாம்.**
2 **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியின் கீழ் மேற்கொள்வதை ஏற்கலாம்.**
3 **அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 162 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.7**

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 19.02.2022ம் அன்று முடிவுற்றதை தொடர்ந்து, இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட காயத்ரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றமைக்கு வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான பணிகள் மேற்கொண்டமைக்கு ஆன செலவினம் தொகை ரூ.65255/—ஐ 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15—இன் கீழ் செலவுகள் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 163 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.8**

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 19.02.2022ம் அன்று நடைபெறுவதை தொடர்ந்து, 22.02.2022ம் தேதியன்று இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட காயத்ரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் வாக்கு எண்ணும் மையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காலை மற்றும் மதியம் ஆகிய இரு வேலைகளில் உணவு மற்றும் குடிநீர் சப்ளைக்கு ஆன செலவினம் தொகை ரூ.56000/—ஐ 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 15—இன் கீழ் செலவுகள் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 164 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.9**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **27.07.2022**ம் தேதிய ந.க.**21191/2021**/CFC1 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, இந்நகராட்சிக்கு **2020–2021**ம் ஆண்டிற்கான **15**வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) திட்டத்தின் கீழ் ரூ.**33.00** இலட்சம் (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஜே.சி.பி வாகனம் (Backhoe Loader Vehicle) வாங்கும் பணி மேற்கொள்ள வரப்பெற்றுள்ள செயல்முறை ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.4426/2020/இ1)**
**நகர்மன்ற தீர்மான எண்:** **165** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.10**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **25.07.2022**ம் தேதிய ந.க.**20860/2022**/SBM எண்ணிட்ட கடிதத்தில், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) 2022-23–இன் கீழ் தொகை ரூ.**46.00** (GOI Share 50%-Rs.23.00 Lakhs, GoTN Share 33% -Rs.15.18 Lakhs and ULB Contribution 17%- Rs.7.82 Lakhs) இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு 4 TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து வார்டு எண்.**19**–இல் மின்னகர் பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.**46.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7942/2022/இ1).**

**நகர்மன்ற தீர்மான எண்:** **166** , நாள் **29.08.2022**
**தீர்மானம்** **:** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை தென்புறம் அமைந்துள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் குப்பைகளை அரைக்கும் இயந்திரத்தில் உள்ள கன்வெயர் பெல்ட் வாங்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**149**, நாள்.**29.07.2022**–இன்படி தொகை ரூ.**40000**/–(நாற்பது ஆயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, அதனைத் தொடர்ந்து **05.08.2022**ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | M/s Techlite Engineerings, Madurai | ரூ.37760/– |
| 2. | M/s Swastik Traders, Madurai | ரூ.42480/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1.மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கோரியுள்ள** M/s Techlite Engineerings, Madurai **என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7900/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 167 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், கடந்த 2012ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் கலெக்சன் கிணற்றில் உள்ள 15HP மோட்டார் ஒரு எண்ணம் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் நேரடியாக வெளியேறக்கூடிய நிலை ஏற்படக்கூடும். எனவே அவசர அவசியம் கருதி ஒரு எண்ணம் 15HP மோட்டார் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6,50,000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.8118/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 168 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சியில் குடிநீர் திட்டப் பணிகள் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் செயலாக்கம் மேற்கொள்ள மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2022–23 ஆண்டு மான்ய கோரிக்கையில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதன் தொடர்ச்சியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண்.15959/2021/அம்ருத்–1 , நாள்.18.04.2022–இன்படி

விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளார். அதன்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.10.00 கோடிக்கு திட்ட பிரேரணை தயார் செய்யவும் ஆலோசகர் (Consultant) நியமனம் செய்து கொள்ள கடந்த 18.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (1%) M/s.அயோத்தி கன்சல்டன்சி, ராஜபாளையம் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி பிரேரணைகள் சென்னை TUFIDCO மற்றும் TUFISUL நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டதில் (Appraisal) குடிநீர் திட்டப் பணிகளுக்கான வடிவமைப்பு அறிக்கையினை திருத்தியமைத்து, அதன்படி விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

தற்போது மத்திய அரசு திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கான விகிதங்கள் Jawaharlal Nehru National Urban Renewal Mission (GoI) திட்டத்தின் Supplementary Tool Kit வழிகாட்டுதலின்படி குடிநீர் திட்டப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கீழ்க்கண்ட விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

As per Table 1: Basis for Reimburstment of Cost related to Preparation of DPR's-இன் இனம் 2(b) –இல் தெரிவித்துள்ளபடி

| | |
|---|---|
| ரூ.20.00 கோடி வரை | – 1.50% |
| ரூ.20.00 கோடி முதல் 70.00 கோடி வரை | – 1% |
| ரூ.70.00 கோடி முதல் ரூ.100.00 கோடி வரை | – 0.75% |
| ரூ.100.00 கோடிக்கு மேல் | – 0.50% |

இதன்படி, சின்னமனூர் நகராட்சி குடிநீர் விநியோக நலன் கருதி ஏற்கனவே மன்ற அனுமதி பெற்று தற்போது, திருத்திய மதிப்பீட்டுத் தொகைக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வரும் M/s.அயோத்தி கன்சல்டன்சி, ராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் மதிப்பீட்டுத் தொகைக்கு ஆலோசகர் (Consultant) -க்கான தொகையினை மேற்படி விகிதத்தில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. சின்னமனூர் நகராட்சி குடிநீர் விநியோக நலன் கருதி, ஏற்கனவே மன்ற அனுமதி பெற்று, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வரும் M/s.அயோத்தி கன்சல்டன்சி, ராஜபாளையம் நிறுவனத்திற்கு தற்போது திருத்திய மேற்கண்ட விகிதத்தின்படி தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**3.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 169 , நாள் 29.08.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.14**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 27.07.2022ம் தேதிய ந.க.21191/2021/CFC1 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, இந்நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கான 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) திட்டத்தின் கீழ் ரூ.33.00 இலட்சம் (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஜே.சி.பி வாகனம் (Backhoe Loader Vehicle) வாங்கும் பணி மேற்கொள்ள 17.08.2022ம் தேதியன்று கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1. | M/s Jayaraj Automobile Agency, Madurai | தொழில்நுட்பம் தகுதி பெற்றுள்ளது. |
| 2. | M/s Jayaraj Tracters, Madurai | தொழில்நுட்பம் தகுதி பெறப்படவில்லை. |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–இல் காணும் M/s.Jayaraj Tracters, Madurai அவர்களின் தொழில்நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கலாம். மேலும் அதனைத் தொடர்ந்து வரிசை எண்.1–இல் காணும் M/s.Jayaraj Automobile Agency, Madurai அவர்களின் விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளியினை 22.08.2022ம் தேதியன்று திறக்கப்பட்டதில் மேற்படி நிறுவனம் அளித்துள்ள விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.27,88,136/– மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.2–இல் காணும் M/s.Jayaraj Tracters, Madurai அவர்களின் தொழில்நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் வரிசை எண்.1–இல் காணும் M/s Jayaraj Automobile Agency, Madurai அவர்களின் விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4426/2020/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 170 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்ய பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.9,60,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.138, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 17.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.01% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர்–0.23% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0973–2/2022/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 171 , நாள் 29.08.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டர்–88AH-1 எண்ணம் மின் கலப்பெட்டி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர் 100AH-2 எண்ணம் மின்கலப் பெட்டி விநியோகம் செய்யும் பணிக்கு தொகை ரூ.36,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.135, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 17.08.2022ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description of Items | M/s MP Power System, Chinnamanur | M/s S.R.Tec, Theni |
|---|---|---|---|
| 1. | Exide Battery 88 Ah-1 No | Rs.10300/- | Rs.11750/- |
| 2. | Exide Battery 100 Ah -2 Nos | Rs.12850/- | Rs.14000/- |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M/s MP Power System, Chinnamanur என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7636/2022/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 172 , நாள் 29.08.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பிரிண்டர்களுக்குத் தேவையான புதிய டோனர்கள் மற்றும் இதர தளவாட சாமான்கள் விநியோகம் செய்யும் பணிக்கு தொகை ரூ.1,50,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.125, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 17.08.2022ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description of Items | M/s Mercury Software, Periyakulam | M/s Swetha System, Madurai |
|---|---|---|---|
| 1. | Epson 774 Ink Bottle (Black | 650/- | 550/– |
| 2. | HP 88A Toner Cartidge Compatible | 600/- | 650/- |
| 3. | K7 Total Security (1Year) | 500/- | 700/- |
| 4. | Epson LQ 310 Ribbon Cartidge | 180/- | 200/- |
| 5. | HP Keyboard USB | 600/- | 700/- |
| 6. | Network Cable LAN CAT6 Meter | 36/- | 40/- |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M/s Mercury Software, Periyakulam என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7482/2022/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 173, நாள் 29.08.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட 16 முதல் 27 வார்டுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் 11 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களில் 8 எண்ணம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் பணிக்கு 8 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் பழுது நீக்கம் பணி மேற்கொள்ள தொகை ரூ.9,90,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.155, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 17.08.2022ம் தேதியன்று கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,

முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.Bose Agency, P.C.Patti – மதிப்பீட்டு விலை விகிதம்
2. M/s BOSS Agency, Periyakulam–0.58% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் M/s.Bose Agency, P.C.Patti என்பவரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டின் விலை விகிதத்திலேயே இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7899/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 174 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.19

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் 12 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களில் 8 எண்ணம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தும் பணிக்கு 8 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் பழுது நீக்கம் பணி மேற்கொள்ள தொகை ரூ.9,90,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.146, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 17.08.2022ம் தேதியன்று கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s.Bose Agency, P.C.Patti – மதிப்பீட்டு விலை விகிதம்
2. M/s BOSS Agency, Periyakulam–0.58% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் M/s.Bose Agency, P.C.Patti என்பவரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டின் விலை விகிதத்திலேயே இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7898/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 175 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.20

சின்னமனூர் நகராட்சி – பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான பிளாஸ்டிக்

விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், நோட்டீஸ்கள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு நோட்டீஸ்கள் அச்சடித்து வழங்கும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பிளாஸ்டிக் விழிப்புணர்வு ஸ்டிக்கர் (1 எண்ணம் ) | கொரோனா விழிப்புணர்வு நோட்டீஸ் (1 எண்ணம் ) | மஞ்சப்பை விழிப்புணர்வு நோட்டீஸ் (1 எண்ணம் ) |
|---|---|---|---|---|
| 1 | The Thoothukudi District Hi-Tech Printing and Allied Service Industrial Co-Operative Siciety Ltd. Kovilpatti. | ரூ.15/— | ரூ.15/— | ரூ.7/— |
| 2 | Kovilpatti Small Scale Industries Service Industrial Co-Operative Siciety Ltd. Kovilpatti. | ரூ.15.50/— | ரூ.15.50/— | ரூ.7.50/— |
| 3 | Thirunelveli District Multipurpose Service Industrial Co-Operative Siciety Ltd. Thirunelvili. | ரூ.16/— | ரூ.16/— | ரூ.8/— |

**அலுவலகக் குறிப்பு:—** 1.வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள The Thoothukudi District Hi-Tech Printing and Allied Service Industrial Co-Operative Siciety Ltd. Kovilpatti நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2.பொதுசுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.5861/2022/எச்1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 176 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.21**

பொதுசுகாதாரம் — ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடியக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள் உபயோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தமிழக அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28459/2021/எச்1 நாள்.02.03.2022 மற்றும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.TNPCB/THENI/F-MISC-23/STF/2022,

நாள்.04.03.2022—ன்படியும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி அலுவலர்கள் மூலமாக தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய வணிக நிறுவனங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கும் பொருட்டு பிளாஸ்டிக் கழிவின் விளைவுகள் குறித்தும், கொரோனா நோய் தொற்று பரவுதலை தடுக்கவும் முகக்கவசம் அணிந்து பொது மக்கள் கடைபிடிக்க வேண்டி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தேவையான நோட்டீஸ்கள் அச்சிட்டு பெற நகர்மன்றத்தீர்மானம் எண்.143 நாள்.29.07.2022இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக விழிப்புணர்வு அறிவிப்புகள் அச்சிட்டு பெற கூடுதல் செலவினம் ரூ.1.20 (ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 177 , நாள் 29.08.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.21, குட்டியப்பன் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சிதலடைந்துள்ள நிலையில் பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படாத வகையில் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மழைநீர் வடிகால் மற்றும் சேதமடைந்துள்ள பேவர் பிளாக் சாலையினை மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.133, நாள்.29.07.2022—இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.11% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி—0.08% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

அலுவலகக் குறிப்பு:— **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.சை எண்.1—இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர்**

**என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7896/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 178 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2020–21–ன்கீழ் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் Purchase of Backhoe Loader Vehicle–1 No வாங்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரி விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூபாய்.15053/–ஐ M/s.Madurai Mani அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4426/2020/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 179 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் 75வது சுதந்திர தின அமுதப் பெருவிழா 11.08.2022 முதல் 17.08.2022 வரை வெகு சிறப்பாக கொண்டாடுவதின் ஒரு பகுதியாக சுதந்திர தின அழைப்பிதழை மக்கள் குரல் தினசரி தமிழ் நாளிதழில் 14.08.2022ம் நாளன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.12500/–ஐ M/s.Newsmen Assiciaties Limited, Madurai அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1359/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 180 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.25**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (Urban) 2.0 2022–23இன் கீழ் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.19, மின்னகரில் நுண்ணுயிர் உரமையம் கட்டும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரி விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூபாய்.5250/–ஐ M/s.Theekkathir Tamil Daily அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.7942/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 181 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18, வ.உ.சி 3வது தெரு மற்றும் 4வது தெருக்களில் மக்களின் நலன் கருதி சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி மேற்கொள்ள தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.129, நாள்.29.07.2022–இன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி – 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.13% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1இல் காணும் திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7892/2022/இ1)**
**நகர்மன்ற தீர்மான எண்:** 182 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.27**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21, வில்லாயுதம் தெரு ட்ரஸ்ட் அண்ணாமலை தெரு மற்றும் மந்தையம்மன் கோவில் ஆகிய தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் சிதலமடைந்துள்ள நிலையில் பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படாதவாறு பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.132, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.04% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி–0.08% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7895/2022/இ1)**
**நகர்மன்ற தீர்மான எண்:** 183 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.28**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.2, காலனி பள்ளித் தெருவில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகளின் நலன் கருதி அத்தியாவசியமான சில மராமத்து பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.7.25 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.134, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி–0.06% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7897/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 184 , நாள் 29.08.2022

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.29**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.23 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் சிறுபாலம் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி சிறுபாலம் கட்டும் பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.130, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி – 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.14% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1இல் காணும் திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7893/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 185, நாள் 29.08.2022
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.30

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.10, ஜக்கம்மாள் கோவில் தெரு, வடக்கு அய்யன் கோவில் தெருக்களில் உள்ள சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி சிறுபாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ள தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.131, நாள்.29.07.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி – 0.09% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு
2.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.11% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1இல் காணும் திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7894/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 186 , நாள் 29.08.2022
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.31

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.5, காந்தி நகர் காலனி பகுதியில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒரு எண்ணம் ஆழ்துளை கிணறு மூலம் மின் மோட்டாருடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.80/– இலட்சத்திறகு (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
**1 மன்றம் அனுமதிக்கலாம்.**
**2 மேற்கண்ட செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 187 , நாள் 29.08.2022
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.32

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு வீடுகளிலும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத

குப்பைகளை தரம் பிரித்து பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை சேகரம் செய்ய பயன்படுத்தப்பட்ட டம்பர் பிளேசர் வாகனம் வண்டி எண்.TN60T4228 பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்த மேற்படி டம்பர் பிளேசர் வாகனத்தினை டிப்பர் வாகனமாக மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— 1 மன்றம் அனுமதிக்கலாம்.**
**2 மேற்கண்ட செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 188 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.33**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு வீடுகளிலும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை சேகரம் செய்ய பயன்படுத்தப்பட்ட டம்பர் பிளேசர் வாகனம் வண்டி எண்.TN60W1755 பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்த மேற்படி டம்பர் பிளேசர் வாகனத்தினை டிப்பர் வாகனமாக மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.50 (ஏழு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— 1 மன்றம் அனுமதிக்கலாம்.**
**2 மேற்கண்ட செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்த மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 189 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.34**

இந்நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.,6,25,000/—க்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.139, நாள்.29.07.2022—இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 01.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.26% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், சின்னமனூர்–0.27% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7615/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 190 , நாள் 29.08.2022

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.35**

சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.24, நாள்.31.03.2022ல் 04.07.2022 வரை ஒப்பந்த காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கவும் மற்றும் கோவிட் 19 தடுப்பூசி தொடர்பான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்தபணி மேற்கொண்டு வரும் திரு.R.பரமானந்தன் ஒப்பந்ததாரர் அவர்களின் மூலமாக மேலும் 05.07.2022 முதல் 04.12.2022 வரை ஆறு மாதங்கள் பழைய ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அசவர அவசியம் கருதி 05.07.2022 முதல் 04.12.2022 வரை ஆறு மாத காலத்திற்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

( ந.க.எண்.1468/2020/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 191 , நாள் 29.08.2022

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.36**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1,2,3,5,13,19,21 மற்றும் 25 ஆகிய பகுதிகளில் உள்ள மினி பவர் பம்ப் மோட்டார் மற்றும் உபகரணங்கள் பழுதினை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.281, நாள்.31.05.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை

தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 24.08.2022ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இஸ்மாயில் ரீவைண்டிங் & என்ஜினியரிங் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.228380/– |
| 2. | மதார் ரீவைண்டிங் & லேத் வெல்டிங் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.235133/– |

அலுவலகக் குறிப்பு:– **1.வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் இஸ்மாயில் ரீவைண்டிங் & என்ஜினியரிங் ஒர்க்ஸ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், இஸ்மாயில் ரீவைண்டிங் & என்ஜினியரிங் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1303/2021/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 192 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.37**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் வந்து செல்லும் விதமாக முறைப்படுத்த புதிய பேருந்து நிலையத்திற்கு எதிர்புறமுள்ள இடத்தில் ஆம்னி பேருந்துகள் நிறுத்தி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தேவையான அடிப்படை வசதிகள் (Wet Mix Macadam சாலை) அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.7.20 (ஏழு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1)மன்றம் அனுமதிக்கலாம்**
**2)மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்:** 193 , நாள் 29.08.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.38**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் வந்து செல்லும் விதமாக முறைப்படுத்த வாரச்சந்தைக்கு எதிர்புறமுள்ள இடத்தில் மினி பஸ்கள் நிறுத்தி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தேவையான அடிப்படை வசதிகள் (Wet Mix Macadam சாலை) அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4.70 (நான்கு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1)மன்றம் அனுமதிக்கலாம்**
**2)மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்**

**நகர்மன்ற தீர்மான** 194 , நாள் 29.08.2022

எண்:
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.39**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம் துறை (MA-3(2) அரசாணை (2டி) எண்.35, நாள்.15.05.2020–இல் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள நகராட்சியில் அதனை சுற்றியுள்ள கசடு கழிவு மேலாண்மை வசதியில்லாத பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் தத்தம் பகுதியிலிருந்து கழிப்பறைகள் மற்றும் வீடுகளிலுள்ள கழிவு நீர் தொட்டிகளிலிருந்து கழிவு கசடுகளை தகுந்த ஊர்தி மூலம் நகராட்சியிலுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து சுத்திகரிப்பு செய்து சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டுமெனவும், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorundum of under standing) செய்து கொள்ள வேண்டுமெனவும், கழிவு நீர் ஊர்திகளுக்கு உரிமம் வழங்க வேண்டுமெனவும், பொது சுகாதார சீர்க்கேட்டை தடுக்கும் பொருட்டு இத்திட்டத்தினை செயல்படுத்திட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. அதன்படி சின்னமனூர் நகராட்சியில் வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் செயல்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உபரி சுத்திகரிப்பு நிலையம் (Co-Treatment Plant) அமைத்து, சுற்றியுள்ள பேரூராட்சிகளான ஓடைப்பட்டி, மார்க்கையன்கோட்டை, குச்சனூர், உத்தமபாளையம், அனுமந்தன்பட்டி ஆகியவற்றை இணைத்து கழிவு நீர் மேலாண்மை திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் 29.01.2021 அன்று போடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியான நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.26888/2018/EA1 , நாள்.29.07.2022–இன் வாயிலாக அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அலுவலர்களுக்கு 04.08.2022 அன்று இது தொடர்பாக பயிற்சி பட்டறை நடத்தப்பட்டு இத்திட்டம் விளக்கி கூறப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் சின்னமனூர் நகராட்சியில் சிறப்பாக செயல்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உபரி சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தேவையான கட்டமைப்புகள் புதியதாக அமைத்து, மேம்படுத்தும் பணி மேற்கொள்ளவும், மேலும் மேற்கூரிய ஐந்து பேரூராட்சிகளை இணைத்து கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 195, நாள் 29.08.2022
**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது.

*******

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்,
நகர்மன்றத்தலைவர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
சின்னமனூர் நகராட்சி